DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 6 |
| Name | : | **மணிமேகலை** |
| Husband Name | : | கருப்பையா |
| Village | : | ஆலம்பக்கோட்டை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | சித்தாள் |
| Age | : | 50/2025 |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர். 2,3 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3 ம் எதிரிகள் சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.04.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போதுஆலம்பக்கோட்டையில் குடியிருந்து சித்தாள் வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1, 2 ஐ தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளும் எனக்கு பக்கத்து வீட்டுக்காரர்கள். நான் எப்போதும் காலை வேலைக்கு சென்றுவிட்டு இரவில் தான் வீட்டிற்கு வருவேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் வேலைக்கு சென்றுவிட்டு இரவு வந்தபோது துரைப்பாண்டி மற்றும் எதிரிகளின் குடும்பத்தினர்களுக்கும் சண்டை என்று சொன்னார்கள். சம்பவத்தை நான் நேரில் பாக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா2 எப்படி காயம்பட்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 13.08.2021ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது துரைப்பாண்டி மற்றும் அவரது மனைவி இந்துமதி மற்றும் எதிரிகள் குடும்பத்தார்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது என்றும் எதிரி அர்ஜீனன் அருவாளால் இந்துமதியின் வலது கையில் வெட்டி காயப்படுத்தினார் என்றும் தடுக்க வந்த துரைப்பாண்டியை அர்ஜீனன் அருவாளால் வலது தோள்பட்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்று்ம் எதிரி அஸ்வினி அருவாளால் துரைப்பாண்டியின் இடது கையின் பின்புற முதுகில் வெட்டி காயப்படுத்தினார் என்று்ம் எதிரி தாரணி துரைப்பாண்டியை கட்டையால் இடுப்பில் அடித்தார் என்றும் நானும் அருகில் இருந்தவர்களும் இருவதையும் விலக்கிவிட்டோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு சாதகமாக வழக்கு சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலிசார் என்னை விசாரிக்கும்போது சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்று தான் கூறினேன். துரைப்பாண்டியின் பெரியப்பா மருமகள் என்றால் சரிதான். அவர் எனக்கு உறவினர்.

**மறு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.17 14:16:31 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.